ஆத்தூர் பகுதியில் கிடங்குகளை ஒட்டிய நேரடி நெல் கொள்முதல் நிலையம் வேண்டுமென கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நெல் கொள்முதல் ஆகும் என்று சொன்னால், ஆய்வு செய்து உடனடியாக நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதனையும், தேவைக்கேற்ப அந்த மாவட்டத்தில் உடனடியாக கிடங்கு அமைத்துத் தருவதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களது அரசு அதனைச் செயல்படுத்தும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

நவீன சாயப்பட்டறைப் பிரிவு

***7112—திரு. இ. பெரியசாமி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டியில் நவீன சாயப்பட்டறைப் பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆத்தூர் தொகுதி, சின்னாளப்பட்டி பகுதியில் நவீன சாயப்பட்டறை அமைக்க அரசு முன்வருமா என மாண்புமிகு ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னாளப்பட்டியில் நவீன சாயப்பட்டறை அமைக்க தற்போது செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.*

திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளப்பட்டியில், தமிழகத்தினுடைய பிரசித்திப் பெற்ற காட்டன் சுங்குடி சேலைகள் ஏறத்தாழ 100 ஆண்டு காலமாக அங்கேயிருக்கின்ற 30,000–க்கும் மேற்பட்ட நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. தமிழகத்திலே காட்டன் சேலைக்கு மிகச்சிறந்த பெயர் பெற்ற சின்னாளப்பட்டி சுங்குடி சேலை, தமிழகத்திலே மட்டுமல்லாமல், இந்திய அளவிலே அது பேரும், புகழும் பெற்ற சேலையாக விளங்குகிறது. கடந்த நான்கு ஆண்டு காலமாக அங்கேயிருக்கின்ற கைத்தறி நெசவாளர்கள் தற்காலிகமாக தாங்கள் நெய்கின்ற காட்டன் சேலைகளுக்குச் சாயம் போடுவதற்காக ஈரோடு, திருப்பூர் போன்ற இடங்களுக்கு, வெகுதூரம் செல்ல வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஏறத்தாழ 100 ஆண்டு காலமாக சாயம் போடும் தொழில் உள்ளூரிலே குடிசைத் தொழிலாக இருந்தது. இப்பொழுது சாயம் போடுவதற்கு சுற்றுச்சூழல் துறை அனுமதிக்காத காரணத்தால், அங்கே இருக்கின்ற 30,000–க்கும் மேற்பட்ட நெசவாளர்களுடைய நிலைப்பாடு மிகவும் சிரமமாக இருக்கிறது. சாயம் போடுவதற்காக அவர்கள் வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரும், செயல் தலைவருமான தளபதியார் அவர்கள் வந்தபொழுதுகூட, அங்கேயிருக்கின்ற நெசவாளர்கள் எல்லாம் சாயப்பட்டறை வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். பிரசித்தி பெற்ற சின்னாளப்பட்டி சுங்குடி சேலைகளைப் பற்றி ஒரு பாடலே இருக்கிறது. 'சின்னாளப்பட்டி சேலை கட்டி வந்தாளே ஒரு குட்டி–அவள் சிரித்த முகம் சீனி சர்க்கரைக் கட்டி' என்ற பாடல் இருக்கிறது. ஆக, அந்த அளவிற்கு பிரசித்தி பெற்ற சின்னாளப்பட்டி சுங்குடி சேலைகளைப் பாதுகாப்பதற்காகவும் அங்கேயிருக்கின்ற நெசவாளர்களைக் காப்பாற்றுகின்ற அடிப்படையிலேயும், அந்தக் குடிசைத் தொழிலை பாதுகாப்பதற்காகவும், அரசின் சார்பாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாயப்பட்டறை அமைக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

[2017 மார்ச் 21

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னாளப்பட்டிப் பகுதியில் தனியார் மூலமாகவும் நூல்கள் சாயமிடும் பணி தற்போது நடைபெறவில்லை. ஒரு கிலோ நூல் சாயமிட 10 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. அந்த அளவிற்கு சின்னாளப்பட்டியில் தண்ணீர் இல்லாத காரணத்தால், அங்கேயிருக்கும் சுற்றுச்சூழல் துறையும், பேரூராட்சியும் அனுமதி தர மறுத்துவிட்டார்கள். எனவே, சின்னாளப்பட்டிப் பகுதியில் போதுமான நீராதாரங்களோ, போதிய நிலத்தடி நீரோ இல்லாத காரணத்தினால் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சின்னாளப்பட்டிப் பகுதியில், அரசின் மூலமாக நவீன சாயப்பட்டறைகள் அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் திருச்சியில் கைத்தறிக் குழுமத்தின்கீழ், தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம், திருவிடைமருதூர், பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் மற்றும் கரூர் மாவட்டம் கரூர் ஆகிய பகுதிகளில் தலா 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாவட்ட அளவிலான 3 சாயப்பட்டறைகள் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு வசதியுடன் அமைக்கப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.

முற்பகல் 10–35

திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் ஏற்கெனவே தோல் பதனிடும் தொழிற்சாலை திண்டுக்கல் நகராட்சிக்கு அருகில்தான் இருக்கிறது. அதன் அருகாமையில் இருக்கின்ற நகராட்சியின் கழிவு நீர் மற்றும் தோல் பதனிடுவதால் வருகின்ற கழிவு நீர் இரண்டையும் ஒருங்கிணைத்து அங்கே ஒரு சுத்திகரிப்பு ஆலையை அமைப்பதற்காக முன்னாள் மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சராக இருந்த திரு. டி.ஆர். பாலு அவர்கள் மூலமாக நாங்கள் அங்கே ஒரு திட்டத்தினைக் கொண்டுவந்து, முழுமையான 100 சதவிகித மத்திய அரசின் மானியத்தினைப் பெற்று அங்கே தோல் பதனிடுவதற்காக– Tannery –தோல் பதனிடும் தொழிற்சாலையை அமைத்தோம். அதனைத் தொடர்ந்து இன்றைக்கு சின்னாளப்பட்டி பகுதியில், சின்னாளப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியின் அருகாமையில்

2017 மார்ச் 21]

ஒரு கிலோ மீட்டர் அல்லது ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்குள் தண்ணீர் வசதி நிறைய இருக்கின்றது. இது குடிசைத் தொழில்தான். இது ஒன்றும் பெரிய அளவிலான தொழில் அல்ல. ஒரு மாதத்திற்கு மூன்று இலட்சம் முதல் நான்கு இலட்சம் சேலைகள்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் அதிக மாசு ஏற்படுகின்ற சூழ்நிலை, சுற்றுச்சூழலை பாதிக்கின்ற சூழ்நிலை நிச்சயமாக இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுத் துறை அதிகாரிகளை அழைத்துப்பேசி இது நிச்சயமாக சுற்றுச்சூழலைப் பாதிக்காது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கின்ற இந்த குடிசைத் தொழிலைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை நிச்சயமாக அழைத்துப் பேசினால்— அதற்குரிய இடமும், அதற்குரிய தண்ணீர் வசதியும் அருகில் ஒரு கிலோ மீட்டர் அல்லது ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கின்றன. அந்தப் பேரூராட்சிக்குள் அமைக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதற்கு அருகாமையிலும் அமைக்கலாம். அங்கிருந்து திருப்பூருக்கு 100 கிலோ மீட்டர் தூரம் செல்கிறோம். அதுபோல் ஈரோட்டிற்குச் செல்ல 120 கிலோ மீட்டர் தூரம் செல்கிறோம். எனவே, அதனை அமைப்பதற்கு—மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு சின்னாளப்பட்டியைப் பற்றி முழுமையாகத் தெரியும். எனவே, நிச்சயமாக இது அங்கே தேவை. இது ஒரு பொதுத் தேவையாக இருக்கின்றது. சின்னாளம்பட்டி சேலை என்று கேட்டு வாங்குவார்கள். வடநாட்டிலும் கேட்டு வாங்குகிறார்கள். தமிழ்நாட்டிலும் முழுக்க முழுக்க கிராமங்களில் அது தேவையான ஒன்றாக இருக்கின்றது. எனவே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறுபரிசீலனை செய்து, அங்கே ஒரு சாயப்பட்டறை அமைக்க முன்வந்தால், நான் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அதற்கான நிதியை முழுமையாகக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கின்றேன். எனவே, இதனை அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 564 சாயச்சாலைகள் உள்ளன. இதில் திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 12 தனியார் சாயச்சாலைகள் உள்ளன. தண்ணீரின் அளவு*

குறைந்ததின் காரணத்தினாலும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் பேரூராட்சிகள் தடை விதிப்பதன் காரணத்தினாலும் மேற்காணும் சாயச் சாலைகள் இயங்காமல் உள்ளன. எனினும், நெசவாளர்களுக்கு உதவும் நோக்கத்தோடு மத்திய, மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படும் கைத்தறிக் குழுமத் திட்டத்தின்கீழ் நவீன முறையில் பொது சாயக் கழிவு நீர் சுத்திகரிப்பு வசதியுடன்கூடிய சாயச்சாலைகள் அமைப்பதற்கு, ஆய்வு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், இதனை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று நவீன வசதிகளுடன்கூடிய சாயச்சாலைகள் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் இங்கே பேசுகின்றபோது அவர்கள் கேட்ட மூலக் கேள்வி கைத்தறித் துறையைப் பற்றியதாகும். ஆனால் அவர்கள் ஆட்சியில் தோல் பதனிடும் தொழிற்சாலைக்கு மத்திய அமைச்சர் அவர்களை வைத்து அவர்கள் செய்ததாக ஒரு பதிவைச் செய்திருக்கிறார்கள். அது தவறான தகவல் ஆகும். அந்தச் சமயத்தில் நானும் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன். அங்கு இருக்கக்கூடிய தோல் பதனிடும் தொழிற் சங்கத்தினுடைய தலைவர்கள் Association Leader–கள் அவர்களைச் சந்தித்தது போல, எங்களையும் சந்தித்து, சென்றமுறை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம், அதுபோல் எங்களுடைய முயற்சி, அவர்களுடைய முயற்சி, எல்லோரும் சேர்ந்துதான் அங்கே கழிவு சுத்திகரிப்பு தோல் பதனிடும் நிலையம் அமைக்கப்பட்டு, எல்லோருக்கும் அந்தப் பாராட்டினைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் மட்டும் செய்ததாகச் சொல்வது தவறு. இது ஒன்று. இரண்டு, அவர் குறிப்பிட்ட சின்னாளப்பட்டி சேலை குறித்து அவர் பாட்டெல்லாம் பாடி, சொன்னார். முற்றிலும் பொருத்தமானது. ஆனால், அதற்கு மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்

2017 மார்ச் 21]

பரிசீலிக்கப்படும் என்ற நல்ல உறுதியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு முன்னாள் அமைச்சர், திரு. இ. பெரியசாமி அவர்களுடைய கோரிக்கையை, எங்களுடைய கோரிக்கையாக வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடன் சேர்ந்து அதற்குரிய நடவடிக்கையை சேர்ந்து எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1788—திரு. எஸ். ரகுபதி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, பொன்னமராவதி வட்டத்திலுள்ள பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, சிறப்பு மருத்துவர்களைப் பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி, பாப்பாயி ஆச்சி அரசு மருத்துவமனை, தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும் என்ற நல்ல செய்தியினை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மருத்துவமனை தற்போது வட்டம்சாரா மருத்துவமனையாக Non taluk *–மருத்துவமனையாக சிறப்பாகச் செயல்பட்டு வருகின்ற மருத்துவமனை. இந்த மருத்துவமனையை தற்போது* Taluk *மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே கூடுதலாக 3 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட 11 புதிய பணியிடங்களும், 1 கோடியே 18 இலட்சம் ரூபாய்க்கு புதிய கட்டடங்களும், தேவையான மருத்துவ உபகரணங்களும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*